LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

### First Examination in Bachelor of Business Administration - 2008/2009/ Bachelor of Economics - 2009/2010 (May/June 2013) (Proper/Repeat)

### EXB/EXE 1084 Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக — நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

---

1. RKM plc. கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2012 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு:

**31.12.2012 இல் உள்ளவாறான பரீட்சை மீதி**

| விடயங்கள் | வரவு | செலவு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 1250,000 |
| கூறப்பட்ட 12% முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 650,000 |
| பொது ஒதுக்கம் | | 215,000 |
| நிறுத்தி வைத்த இலாப மீதி 01.01.2012 இல் | | 225,000 |
| 10% தொகுதிக்கடன்கள் | | 200,000 |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு 01.01.2012 இல் | | 15,000 |
| முதலீட்டு வருமானம் | | 22,500 |
| காசும் வங்கியும் | 289,500 | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் / 01.01.2012 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் (காணியின் கிரயம் ரூ.800000) | 1500,000 | 100,000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 400,000 | 60,000 |
| மோட்டார் வாகனங்கள் | 650,000 | 200,000 |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 1225,000 | 2550,000 |
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 430,000 | 247,000 |
| செலுத்திய வருமான வரி | 275,000 | |
| 2011 ஆம் இறுதிக்காலாண்டுக்கான வருமான வரி ஏற்பாடு | | 65,500 |
| இயக்குனர் வேதனங்கள் | 150,000 | |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 10,000 | |
| நிர்வாக செலவினங்கள் | 190,000 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 45,000 | |
| விற்பனை விநியோகச் செலவினங்கள் | 135,500 | |
| முதலீடுகள் | 250,000 | |
| இருப்புக்கள் 01.01.2012 இல் | 250,000 | |
| | **5800,000** | **5800,000** |

**மேலதிகத் தகவல்கள்:**

I. 31.12.2012 இல் இருப்புக்கள்- ரூ.400,000.

II. 31.12.2012 இல் சென்மதியாவுள்ள நிர்வாக செலவினங்கள் ரூ. 27,000

III. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

| | |
|---|---|
| கட்டடம் | - 2 % கிரயத்தில் |
| தளபாடம் பொருத்திகள் | - 10% குறைந்துசெல் மீதியில் |
| மோட்டார் வாகனங்கள் | - 15% கிரயத்தில் |

IV. கடன்பட்டோரிலிருந்து ரூ.30,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் மிகுதிக்கடன்பட்டோரில் 5% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

V. 2011 இன் இறுதிக் காலாண்டின் வருமான வரி ரூ.60,000 என ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் செலுத்தப்பட்டது. நடப்பாண்டின் (2012) இறுதிக் காலாண்டுக்கான வருமான வரியேற்பாடு ரூ.71,500 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

VI. காணி ரூ.875,000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இப் பெறுமதியையே கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VII. இயக்குனர்கள் பின்வருமாறு தீர்மானித்துள்ளனர்:

(அ) ரூ.50,000 ஐ பொதுஒதுக்கத்திற்கு மாற்றுதல்

(ஆ) சாதாரண பங்குதாரர்களுக்கு 10% பங்கிலாபத்தினையும் முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்குரிய பங்கிலாபத்தினையும் வழங்குதல்.

**வேண்டப்படுவது :**

சாதாரண பங்குதாரருக்கு பிரசுரிக்கத்தக்க வகையில் RKM plc. கம்பனியின் 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுகான முழுமையான வருமானக் கூற்று, உரிமையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று, மற்றும் 31.12.2012 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று என்பவற்றைத் தயாரிக்குக. (குறிப்புக்களையும் செய்கைகளையும் தெளிவாகக் காட்டுக.)

**(25 புள்ளிகள்)**

2. ஒரு தனிவியாபாரியாகிய திரு.செல்வம் என்பவர் அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயினும் 31.12.2012 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழங்கக் கூடியவராகவுள்ளார்.

23 AUG 2013 EASTERN UNIVERSITY, SRI

I. 01.01.2012 இலும் 31.12.2012 இலும் உள்ளவாறான சொத்துக்களும் பொறுப்புக்களும்:

| | 01.01.2012 | 31.12.2012 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 100,000 | 125,150 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 37,500 | 61,250 |
| இருப்புக்கள் | 62,500 | 31,250 |
| வங்கி மீதி | 6,250 | ? |
| காசு மீதி | 5,00 | 1,500 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 25,250 | 24,000 |

II. 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்:

| | ரூபா. |
|---|---|
| வங்கியிடப்பட்ட காசு | 79,250 |
| வங்கியில் மேற்கொண்ட தனிப்பட்ட எடுப்பனவுகள் | 15,000 |
| மூலதனம் வங்கியிலிடப்பட்டது | 25,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 176,250 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட காசோலைகள் | 76,250 |
| காசு மூலம் செலுத்திய செலவுகள்: கூலியும் சம்பளமும் | 67,250 |
| விநியோக செலவுகள் | 13,250 |
| பொதுச் செலவுகள் | 21,250 |
| காசோலை மூலம் செலுத்திய செலவுகள்: வாடகையும் வரியும் | 4,750 |
| மின்கட்டணம் | 12,000 |
| காசு விற்பனைகள் | 41,250 |
| காசோலை மூலம் தளபாடக் கொள்வனவு | 31,250 |

**வேண்டப்படுவது:**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.01.2012 இல் உள்ளவாறான ஐந்தொகை

ii. 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு (இரட்டை நிரல்)

iii. 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு

iv. 31.12.2012 இல் உள்ளவாறான ஐந்தொகை

(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(25 புள்ளிகள்)**

3. NSK plc கம்பனியானது கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தினையும், மட்டக்களப்பிலுள்ள தன்னிச்சையான கிளையொன்றினையும் கொண்டு இயங்குகின்றது. பொருட்கள் கிரயத்துடன் 25% கூட்டி தலைமை அலுவலகத்தினால் கிளைக்கு அனுப்பப்படுகின்றன. கிளையும் தனது கொள்வனவை உள்ளூர் சந்தையில் மேற்கொள்கின்றது. 31.12.2012 இல் உள்ளவாறான தலைமை அலுவலகத்தினதும் பரீட்சை மீதிகள் பின்வருமாறு:

| | தலைமையலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
| மூலதனம் | | 120,000 | | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 200,000 | | |
| த.அ.லிருந்து பெறப்பட்ட பொருட்கள் | | | 188,000 | |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 700,000 | 820,000 | 125,000 | 525,000 |
| ஆரம்ப இருப்பு - கிரயத்தில் | 45,000 | | | |
| ஆரம்ப இருப்பு - பட்டியல் விலையில் | | | 36,000 | |
| தேறாத இலாப ஏற்பாடு 1.1.2012 இல் | | 7,200 | | |
| நிர்வாக சம்பளங்கள் | 65,000 | | 39,000 | |
| வரியும் காப்புறுதியும் | 33,000 | | | |
| சில்லறைச் செலவுகள் | 5,500 | | 4,700 | |
| நிலையான சொத்துக்கள் கிரயத்தில் / பெறுமானத்தேய்வு ஏற்பாடு 1.1.2012 இல் | 350,000 | 100,000 | 190,000 | 62,500 |
| கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | 62,000 | 80,500 | 25,000 | |
| வங்கி மீதி | 50,900 | | 12,300 | |
| இலாப நட்ட கணக்கு 1.1.2012 இல் | | 32,300 | | |
| த.அ. நடைமுறைக் கணக்கு | | | | 32,500 |
| கிளை நடைமுறைக் கணக்கு | 48,600 | | | |
| | **1360,000** | **1360,000** | **620,000** | **620,000** |

**மேலதிகத் தகவல்கள்:**

1. 31.12.2012 இல் இருப்புக்கள்: தலைமையலுவலகம் ( கிரயத்தில்) – ரூ. 75,000.
   கிளை – ரூ. 49000.

   கிளையால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் 1/5 பங்கு கிளையின் இருப்பினுள் உள்ளடங்கியுள்ளது.

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

2. வழியிற் சரக்கு (பட்டியல் விலையில்) - ரூ. 12,000.
   வழியிற் காசு - ரூ. 4,100.
3. ஆண்டின் இறுதியில் தலைமையலுவலகத்தின் வரி மற்றும் காப்புறுதிச் செலவுகளில் 20% ஐ கிளைக்கு சாட்டுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டடது.
4. நிலையான சொத்துக்களுக்கு புத்தகப் பெறுமதியில் ஆண்டுக்கு 10% பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

I. பின்வருவனவற்றை தலைமை அலுவலகம், ,கிளை ,மற்றும் முழு வியாபாரம் ஆகியவற்றிற்கு நிரல் முறையில் தயாரிக்குக.

(அ) 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு

(ஆ) 31.12.2012 இல் உள்ளவாறான ஐந்தொகை.

II. தலைமையலுவலக நடைமுறைக்கணக்கு மற்றும் கிளை நடைமுறைக்கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குக.

**(25 புள்ளிகள்)**

**4.** சமுக நலன்புரி கழகம் ஒன்றின் நிதித்தரவுகள் பின்வருமாறு:

**31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான செலவுக் கணக்கு**

| விடயங்கள் | வரவு<br>ரூபா. |
|---|---|
| **வருமானங்கள்:** | |
| சந்தாக்கள் | 170,000 |
| நுழைவுக் கட்டணம் | 4,000 |
| பயிற்சிக் கட்டணம் | 36,000 |
| (அ) | **210,000** |
| **செலவுகள்** | |
| சம்பளங்கள் | 120,000 |
| காகிதாதிகள் | 6,000 |
| தொலைபேசிக் கட்டணம் | 1,500 |
| தபால் செலவுகள் | 500 |
| பொதுச் செலவுகள் | 12,000 |
| வங்கிக் கட்டணங்கள் | 5,500 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 2,500 |
| பயிற்சிச் செலவுகள் | 25,000 |
| கழக கட்டடம் மீதான பெறுமானத்தேய்வு | 10,000 |
| பயிற்சி உபகரணங்கள் மீதான பெறுமானத்தேய்வு | 7,000 |
| (ஆ) | **190,000** |
| செலவிலும் கூடிய வருமானம் (அ) – (ஆ) | **20,000** |

மீதிகள்:

| | 01.01.2012 | 31.12.2012 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| கழக கட்டடம் | 190,000 | 180,000 |
| பயிற்சி உபகரணங்கள் | 52,000 | 63,000 |
| வங்கி மீதி | 10,000 | ? |
| காசு மீதி | 22,500 | 25,000 |
| சந்தாக்கள் நிலுவை | 16,000 | 18,000 |
| முற்பண சந்தாக்கள் | 13,000 | 8,400 |
| சம்பள நிலுவை | 6,000 | 8,000 |
| | | |

**வேண்டப்படுவது:**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

i. 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு

ii. 31.12.2011 மற்றும் 31.12.2012 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள்.

(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(25 புள்ளிகள்)**